ஞாயிறுதோறும்
தினமணியுடன்...
தினமணி கொண்டாட்டம்

தினமணி
வியாழக்கிழமை, 5 நவம்பர் 2026

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

# கரும்பு விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை: முதல்வர் விஜய் வழங்கினார்

**சென்னை, நவ. 4:** கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகையாக டன்னுக்கு ரூ.709.50 வழங்கும் திட்டத்தை முதல்வர் ச.ஜோசப் விஜய் புதன்கிழமை தொடங்கி வைத்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கு நேரடியாக அதற்கான ஆணையை அவர் வழங்கினார்.

இதுதொடர்பாக தமிழக அரசு சார்பில் வெளியிடப்பட்ட செய்தி:

முதல்வர் விஜய் தலைமையிலான அரசு பொறுப்பேற்றதில் இருந்து, விவசாயிகளின் நலனைப் பாதுகாத்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.



கரும்பு விவசாயிகளுக்கு சென்னை தலைமைச் செயலகத்தில், சிறப்பு ஊக்கத் தொகைக்கான ஆணைகளை வழங்கிய முதல்வர் ச.ஜோசப் விஜய். உடன் வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் ர.வினோத், தலைமைச் செயலர் மு. சாய்குமார், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை – உழவர் நலத் துறைச் செயலர் நா. வெங்கடேஷ் உள்ளிட்டோர்.

அந்த வகையில், கரும்பு விவசாயிகளின் நலனை மேம்படுத்துவதற்காக ரத்தை அரசு சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு டன்னுக்கு ரூ.709.50 சிறப்பு ஊக்கத் தொகையாக வழங்கப்படும் என முதல்வர் விஜய், கடந்த சட்டப் பேரவைக் கூட்டத் தொடரில் 110 விதியின் கீழ் அறிவித்தார்.

அதைத் தொடங்கிவைத்து நிறைவேற்றும் வகையில், 3 கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகைக்கான ஆணைகளை தலைமைச் செயலகத்தில் முதல்வர் வழங்கினார். இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதும் சுமார் 85,000 கரும்பு விவசாயிகள் பயன்பெறுவர். இதற்காக, நடப்பு ஆண்டில் ரூ.603.33 கோடி அரசுக்குக் கூடுதல் செலவினம் ஏற்படும்.

இந்நிகழ்வில், வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் வினோத், தலைமைச் செயலர் மு. சாய்குமார், வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறைச் செயலர் வெங்கடேஷ், சர்க்கரை துறை ஆணையர் கண்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## புயல் நிவாரண நிதி...



ஆந்திர முதல்வர் என்.சந்திரபாபு நாயுடுவிடம் நிவாரண நிதி ரூ.1 கோடிக்கான வங்கி வரைவோலையை வழங்கிய விஜடி வேந்தர் கோ. விசுவநாதன்.
உடன், விஜடி துணைத் தலைவர்கள் சங்கர் விசுவநாதன், சேகர் விசுவநாதன் மற்றும் விஜடி அமராவதி வளாகத்தின் பதிவாளர் ஜகதீஷ் சந்திர முடிகந்தி.

## நீட் தேர்வுக்கான ஆன்லைன் விண்ணப்பம் சமூகப் பிரிவை மாற்றக் கோரிய 6 மாணவர்கள் மனு தள்ளுபடி

**சென்னை, நவ.4:** நீட் தேர்வுக்கான ஆன்லைன் விண்ணப்பத்தில் தங்களது சமூகப் பிரிவை மாற்றக் கோரி விண்ணப்பதாரர்கள் 6 பேர் தாக்கல் செய்த மனுக்களை தள்ளுபடி செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.



2024-ஆம் ஆண்டு நடைபெற்ற நீட் தேர்வுக்கான ஆன்லைன் விண்ணப்பத்தில் தவறுதலாக பொதுப் பிரிவினர் என குறிப்பிட்டதாகவும், பொதுப் பிரிவு என்பதை இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என மாற்றம் செய்ய வாய்ப்பு கோரியும் மதிதர்ஷினி உள்பட 6 மாணவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் தனித்தனியாக வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகளை விசாரித்த நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், ஆர்.ராஜேஷ் விவேகானந்தன் ஆகியோர் அமர்வு பிறப்பித்த உத்தரவு: அகில இந்திய அளவில் நடக்கும் தேர்வில், விண்ணப்பதாரர்களை பொதுப் பிரிவிலிருந்து இதர பிற்படுத்தப்பட்ட பிரிவுக்கு மாற்றினால் பெருத்த பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே, நீட் தேர்வுக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்கும்போது ஏற்படும் தவறுகளை திருத்த இரண்டு அவகாசங்கள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், மனுதாரர்கள் அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளவில்லை.

அகில இந்திய அளவில் நடத்தப்படும் தேர்வுகள், அரசுப் பணியாளர் தேர்வாணையத் தேர்வுகள், போட்டித் தேர்வுகளின்போது, விண்ணப்பதாரர்களுக்கு தவறான விதத்தில் கருணை காட்டினால், தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களின் உரிமைகள் பாதிக்கப்படும் என நீதிமன்றங்கள் தீர்ப்புகள் அளித்துள்ளதால், மனுதாரர்கள் கோரிய நிவாரணத்தை வழங்க முடியாது எனக் கூறி, மனுக்களை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

## ‘அண்ணன் சீர்’ திட்டம்
# தங்க நாணயம்; பட்டுப் புடவை விநியோகிக்க ஒப்பந்தப்புள்ளி

**சென்னை, நவ. 4:** ‘அண்ணன் சீர்’ திட்டத்தின் கீழ் 1 பவுன் தங்க நாணயம், பட்டுப் புடவைகளை அரசுக்கு விநியோகிக்க ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளது.

தவெக தேர்தல் வாக்குறுதிகளில் முக்கியமானது ‘அண்ணன் சீர்’ திட்டம். அதன்படி, பெண்களின் திருமணத்துக்கு தமிழக அரசு சார்பில் ஒரு பவுன் தங்க நாணயம், ஒரு பட்டுப்புடவை அண்ணன் சீராக வழங்கப்படும் என்று சட்டப்பேரவையில் நிதியமைச்சர் மரிய வில்சன் அறிவித்தார். அதை செயல்படுத்த ரூ.812 கோடி நிதியை ஒதுக்கி தமிழக அரசு அரசாணை வெளியிட்டது.

அதைத்தொடர்ந்து 60,000 எண்ணிக்கையில் 8 கிராம் தங்க நாணயங்கள் மற்றும் பட்டுப் புடவைகளைக் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப் புள்ளி கோரும் அறிவிப்பை சமூகநலத்துறை தற்போது வெளியிட்டுள்ளது.

இது குறித்து சமூகநலத்துறை வெளியிட்ட ஒப்பந்த அறிவிப்பு விவரம்: பிஜஎஸ் ஹால்மார்க் முத்திரையுடன் கூடிய 22 காரட் (916) தரத்திலான 8 கிராம் நாணயங்கள் வழங்கப்பட வேண்டும். 22 மி.மீ விட்டம் கொண்ட நாணயத்தின் ஒரு பக்கத்தில் தமிழில் அரசு இலச்சினை பொறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இதற்கு வைப்புத் தொகையாக ரூ.6 கோடி செலுத்தவேண்டும். அதை வழங்கும் நிறுவனங்களின் கடந்த 3 நிதியாண்டு சராசரி ஆண்டு வருவாய் ரூ.750 கோடிக்கு குறையாமல் இருக்க வேண்டும். தங்கத்தின் விலையானது கொள்முதல் நாளின் விலையின்படி கணக்கிடப்பட்டு, செய்கூலி உள்ளிட்ட கட்டணங்கள், ஜிஎஸ்டி சேர்க்கப்படும். அவற்றை 30 நாள்களுக்குள் விநியோகிக்க வேண்டும்.

விருப்பமுள்ள நிறுவனங்கள், விண்ணப்பங்களை டிச. 4-ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். இதைத் தவிர சில்க் மார்க், கைத்தறி முத்திரை பெற்ற 100 சதவீதம் தூய மல்பெரி பட்டுப் புடவைகள் தரப்பட வேண்டும். புடவை 5.50 மீட்டர், ரவிக்கைத் துணி 0.70 மீட்டர் என மொத்தம் 6.20 மீட்டர் நீளமும், 430 கிராம் எடையும் (பட்டு 380, ஜரிகை 50) கொண்டிருக்க வேண்டும்.

மேலும், வைப்புத்தொகையாக ரூ.24 லட்சம் செலுத்த வேண்டும். கடந்த 3 நிதியாண்டுகளின் சராசரி ஆண்டு வருவாய் ரூ.30 கோடிக்குக் குறையாமல் இருப்பதுடன், புடவைகளை 120 நாள்களுக்குள் விநியோகிக்க வேண்டும். இதற்கான விண்ணப்பங்களை டிச. 7-க்குள் சமர்ப்பிக்க வேண்டும். ஆவண கட்டணம் ரூ.5,725 செலுத்துதல் அவசியம். கூடுதல் விவரங்களை www.tntenders.gov.in, www.tnsocialwelfare.tn.gov.in ஆகிய வலைதளங்களில் அறிந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென் மாவட்டங்களில் இன்று பலத்த மழைக்கு வாய்ப்பு

**சென்னை, நவ. 4:** தேனி, திண்டுக்கல், மதுரை ஆகிய மாவட்டங்களில் வியாழக்கிழமை (நவ. 5) பலத்த மழைக்கு வாய்ப்புள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



இது குறித்து அந்த மையம் புதன்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: தென் தமிழகம் மற்றும் அதையொட்டிய பகுதிகளின் மேல் வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இதன் தாக்கத்தால், வியாழக்கிழமை (நவ. 5) தேனி, திண்டுக்கல், மதுரை ஆகிய மாவட்டங்களிலும், வெள்ளிக்கிழமை (நவ. 6) தேனி, திண்டுக்கல், மதுரை, தூத்துக்குடி, ராமநாதபுரம், புதுக்கோட்டை, சிவகங்கை ஆகிய மாவட்டங்களிலும், நவ. 7-ஆம் தேதி மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களிலும் பலத்த மழைக்கு வாய்ப்புள்ளது.

இந்த நாள்களில் ஏனைய தமிழகத்திலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வியாழக்கிழமை (நவ. 5) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது.

**மழைப் பதிவு:** தமிழகத்தில் புதன்கிழமை காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் ஈரோடு மாவட்டம் தாழ்குனி - 90 மி.மீ. மழை பதிவானது. குன்னத்தூர் (திருப்பூர்), திங்களூர் (ஈரோடு), காரமடை (கோவை) - தலா 80 மி.மீ., சின்னக்கல்லார் (கோவை), பவானிசாகர் (ஈரோடு) தலா 7, கலசப்பாக்கம் (திருவண்ணாமலை) - 60 மி.மீ. மழை பதிவானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குரூப் 4 தேர்வுக்கு விண்ணப்பிக்கும் அவகாசம் நீட்டிப்பு: டிஎன்பிஎஸ்சி

**சென்னை, நவ. 4:** குரூப்-4 தேர்வுக்கு விண்ணப்பிக்கும் கால அவகாசம் நவ. 8-ஆம் தேதி வரை நீட்டிக்கப்படுவதாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் கிராம நிர்வாக அலுவலர், பல்வேறு துறைகளில் இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர், வருவாய் உதவியாளர் உள்பட பல்வேறு பதவிகளில் 6,574 காலியிடங்களை நிரப்புவதற்கான ஒருங்கிணைந்த குரூப்-4 தேர்வுக்கான அறிவிப்பை டிஎன்பிஎஸ்சி கடந்த அக்.6-ஆம் தேதி வெளியிட்டது.

இதற்கான இணையவழி விண்ணப்பப் பதிவு அன்றைய தினத்தில் இருந்தே தொடங்கியது.

இத்தேர்வுக்கு நவ. 5-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது விண்ணப்பிக்கும் அவகாசம் நவ. 8-ஆம் தேதி வரை நீட்டிக்கப்படுவதாக டிஎன்பிஎஸ்சி தெரிவித்துள்ளது.

அரசுப் பணிகளில் நேரடி நியமனத்துக்கான வயது உச்ச வரம்பை, மேலும் 5 ஆண்டுகள் உயர்த்தப்படுவதாக தமிழக அரசின் மனிதவள மேலாண்மைத் துறை சார்பில் கடந்த அக். 30-ஆம் தேதி அரசாணை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து இந்த அவகாசம் நீட்டிக்கப்படுவதாக டிஎன்பிஎஸ்சி செயலர் பானோத் மருகேந்தர் லாலா புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே, குரூப்-4 தேர்வுக்கு இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி டிஎன்பிஎஸ்சி இணையதளத்தில் (www.tnpsc.gov.in) நவ. 8-ஆம் தேதி நள்ளிரவு 11.59 மணி வரை விண்ணப்பிக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர். குரூப் 4 பணியிடங்களுக்கான எழுத்துத் தேர்வு அடுத்த ஆண்டு ஜன. 10-ஆம் தேதி நடைபெற உள்ளது.

## 12 மீட்டருக்கு கூடுதல் நீள வாகனங்கள் கொடைக்கானல் செல்லத் தடை

**திண்டுக்கல், நவ. 4:** கொடைக்கானலுக்கு வருகிற டிசம்பர் 1-ஆம் தேதி முதல் 12 மீட்டருக்கு கூடுதல் நீளம் கொண்ட வால்வோ போன்ற பயணிகள் வாகனம், பொருள்கள் கொண்டு செல்லும் வாகனம் ஆகியவற்றை இயக்குவதற்குத் தடை விதிக்கப்படுகிறது.

இதுகுறித்து திண்டுக்கல் மாவட்ட நிர்வாகம் தெரிவித்ததாவது: திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில்போக்குவரத்துநெரிசலைத் தவிர்க்கும் வகையில், தமிழ்நாடு மோட்டார் வாகனச் சட்டம் 1989, விதி 370, பிரிவு 1-ன்கீழ் மண்டல போக்குவரத்து அலுவலர், மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் படி 1.12.2026 முதல் 12 மீட்டருக்கு கூடுதல் நீளம் கொண்ட வால்வோ போன்ற பயணிகள் வாகனம், பொருள்கள் கொண்டு செல்லும் வாகனம் ஆகியவற்றை இயக்குவதற்குத் தடை விதிக்கப்படுகிறது.

திண்டுக்கல் மாவட்டத்தில் வத்தலகுண்டு-கொடைக்கானல் சாலை, அய்யம்பாளையம் - சித்தரேவு - தாண்டிக்குடி வழியாக கொடைக்கானல் செல்லும் சாலை, தருமத்துப்பட்டி - பன்றிமலை - தாண்டிக்குடி வழியாக கொடைக்கானல் செல்லும் சாலை, ஒட்டன்சத்திரம் - பாச்சலூர் வழியாக கொடைக்கானல் செல்லும் சாலை, பழனி - சவரிக்காடு - வடகவுஞ்சி வழியாக கொடைக்கானல் செல்லும் சாலை, பெரியகுளம் கும்பக்கரை பிரிவு - அடுக்கம் வழியாக கொடைக்கானல் செல்லும் சாலை என கொடைக்கானல் செல்லும் அனைத்து சாலைகளுக்கும் இந்தத் தடை பொருந்தும் எனத் தெரிவிக்கப்பட்டது.


**IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட்**
(முன்னாள் கேபிடல் ஃபர்ஸ்ட் லிமிடெட் IDFC பேங்க் லிமிடெட் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு தற்போது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் என அறியப்படுகிறது)
IDFC FIRST Bank
CIN : L65110TN2014PLC097792
பதிவு அலுவலகம் : KRM டவர்ஸ், 8வது தளம், ஹாரிங்டன் சாலை, சேத்துப்பட்டு, சென்னை - 600031
தொ.பே.: +91 44 4564 4000 | தொ.ந.: +91 44 4564 4022

**கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம்-2002, பிரிவு 13(2)-ன் கீழ் அறிவிப்பு**

கீழ்காணும் கடன்தாரர்கள் மற்றும் கூட்டுக்கடன்தாரர்கள், எமது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் வங்கியிடமிருந்து (முன்னாள் கேபிடல் ஃபர்ஸ்ட் லிமிடெட் IDFC பேங்க் லிமிடெட் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு தற்போது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் என அறியப்படுகிறது) கீழ்க் காணும் ஈட்டுநிதி செய்யப்பட்ட கடன் வசதிகளைப் பெற்றுள்ளார். கீழ்க்காணும் கடன்தாரர்கள் மற்றும் கூட்டுக்கடன்தாரர்கள் பெற்றுள்ள கடன்களுக்கு ஈடாக தத்தமது சொத்துக்களை வங்கியிடம் அடமானம் வைத்துள்ளார். அவர்கள் அவரவர்களது கடன் ஒப்பந்தங்களின்படியான விதிமுறை நிபந்தனைகளைப் பின்பற்றத் தவறியிட்டதால் அந்தக் கடன் கணக்குகள் ஒழுங்கற்றதாக விட்டன. அதனால், அவை, RBI வழிகாட்டுதல்படி NPA (வாராக் கடன்கள்) என வகைப்படுத்தப் பட்டுள்ளன. அவரவருக்கான அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளபடி அவர்கள் IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் வங்கிக்கு (முன்னாள் கேபிடல் ஃபர்ஸ்ட் லிமிடெட் IDFC பேங்க் லிமிடெட் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு தற்போது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் என அறியப்படுகிறது) செலுத்த வேண்டிய கடன் பாக்கிகள் பின்வரும் அட்டவணையில் மேலும் குறிப்பாக விவரிக்கப்பட்டுள்ளதோடு, அத்தொகைகள் மீதான மேல் வட்டியும் உண்டு. அந்த வட்டியானது அந்தந்த தேதியிலிருந்து ஒப்பந்த விகிதத்தில் விதிக்கப்படும்.

| வ. எண் | கடன் கணக்கு எண் | கடன் வகை | கடன்தாரர்கள் மற்றும் கூட்டுக்கடன்தாரர்கள் பெயர் | பிரிவு 13(2) அறிவிப்பு நாள் | பிரிவு 13(2) அறிவிப்பின்படி கடன் பாக்கித் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 112682821 | சொத்து மீதான கடன் | 1. சீரங்கன்பழனியப்பன் 2. சுமதி சீரங்கன் | 14-10-2026 | இந்திய ரூபாய். 8,01,344.75/- |

**சொத்து முகவரி** : அனைத்து இன்றியமையாப் பகுதிகளும் பாகங்களும் கூடிய சொத்து அமைவிடம் : ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் பதிவு மாவட்டம், கவுந்தப்பாடி சார்பதிவாளர் அலுவலகம், பவானி வட்டம், சவங்பாளையம் கிராமம், புதிய சர்வே எண் 217/5 (உட் பிரிவுக்குப் பிறகு புதிய சர்வே எண் 217/5C), புஞ்சை ஹெக்டேர் 0.33.0 (பழைய கா.சர. எண் 88B) மொத்தப் பரப்பளவு 1088 3/4 சதுர அடி (அல்லது) 101.14 சதுர மீட்டர் கொண்ட விட்டு மனை மற்றும் அதன் மீதுள்ள கட்டடம். இதன் எல்லைகள் பின்வருமாறு :- (மேற்படி எல்லைகளுக்குள் அளவீடுகள் தென்வடல் இரு பக்கங்களில் தலா 65 அடி, கிழமேல் இரு பக்கங்களில் தலா 16 3/4 அடி என மொத்தம் 1088 3/4 சதுர அடி (அல்லது) 101.14 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட விட்டு மனை மற்றும் கட்டிடம். இதில் உள்ள அனைத்து அறைகள், கதவுகள், கதவு உபகரணங்கள், மின் பொருத்தல்கள், மின் சேவை இணைப்பு, பொதுப் பாதை, பொதுச் சாலை மீதான மாமூல் உரிமைகள் போன்றவை இதில் அடங்கும். TNEC SC. எண் : 04-018-005-1129, கதவு எண் : 18/1, வரி மதிப்பீட்டு எண்: 685 மேற்கு பஞ்சி). **வடக்கு** : P. பரமசிவன் தான செட்டில்மெண்ட் சொத்து, **மேற்கு** : கருப்பண்ணன் சொத்து, **வடக்கு** : 16 அடி அகல கிழக்கு - மேற்கு பாதை, **தெற்கு** : உதயகுரியன் வீடு.

அகமாயை, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 60 நாள்களுக்குள் நீங்கள் மேலே குறிப்பிட்டுள்ள அட்டவணையில் காணும் விவரங்களின்படி கடன் பாக்கி தொகையுடன் அவரவர்களுக்கான மேற்படி தேதியிலிருந்து ஒப்பந்த விதத்திலான வட்டி, செலவுகள் மற்றும் கட்டணங்கள் போன்றவை சேர்த்து முழுத்தொகையும் IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் (முன்னாள் கேபிடல் ஃபர்ஸ்ட் லிமிடெட் IDFC பேங்க் லிமிடெட் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு தற்போது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் என அறியப்படுகிறது) வசம் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். தவறினால், IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட்-க்கு (முன்னாள் கேபிடல் ஃபர்ஸ்ட் லிமிடெட் IDFC பேங்க் லிமிடெட் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு தற்போது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் என அறியப்படுகிறது) செலுத்தப்பட வேண்டிய கடன் பாக்கியை வசூலிப்பதற்காக, கீழே கையொப்பமிட்டவர் மேற்குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் மேற்குறிப்பிட்ட அதிகாரம் சொத்துக்கள் மீது சர்பாசி சட்டம் பிரிவு 13(4) மற்றும் பிரிவு 14-ன் கீழ் நடவடிக்கை எடுக்கும் அவசியம் ஏற்படும். மேலும் மேற்குறிப்பிட்ட சட்டம் பிரிவு 13(13)-ன் கீழ், மேற்குறிப்பிட்ட கடனீட்டு சொத்துக்களை எமது அனுமதியில்லாமல் விற்பனை / குத்தகை அல்லது வேறு இதர முறைகள் மூலம் உரிமைமாற்றம் செய்வதற்கு தாங்கள் தடை விதிக்கப்படுகிறீர்கள் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

ஒம்/- அதிகாரபூர்வ அலுவலர்
IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட்
நாள் : 05.11.2026
இடம் : ஈரோடு, தமிழ்நாடு
(முன்னாள் கேபிடல் ஃபர்ஸ்ட் லிமிடெட் IDFC பேங்க் லிமிடெட் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு தற்போது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் என அறியப்படுகிறது)



சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
Central Bank of India
CENTRAL TO YOU SINCE 1911
மண்டல அலுவலகம் : 14/15, வெரைட்டி ஹால் ரோடு, கோவை - 641 001

**மாபெரும் மின்னணு ஏல அறிவிப்பு**
(E-Auction Notice)
( SARFAESI சட்டம் 2002-ன் கீழ்)

SARFAESI சட்டம் 2002 மற்றும் அதன் பிரிவு 13 (4) ன் கீழ் அதிகாரம் பெற்ற சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி அதிகாரி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்களை கீழ்க்கண்ட தேதிகளில் சுவாதீனம் எடுத்திருந்தார். இதனைத்தொடர்ந்து கீழ்க்கண்ட தேதிகளில் மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் பின்வரும் கடன் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு வர வேண்டிய கடன் நிலுவைத் தொகைகளை வட்டியுடன் வசூலிக்கும் விதமாக பட்டியலில் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்யும் உரிமையுடன் கூடிய கேட்பு அறிவிப்பினை அனுப்பியிருந்தார். ஆனால் கடன்தாரர் / உத்தரவாதம் அளித்தவர் / அடமானம் வைத்தவர் கடன் நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்த தவறியதால், இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரி மேலே குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13 (4) (a) மற்றும் விதி 8 மற்றும் 9 ன் கீழ், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் வங்கிக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூல் செய்திட உள்ளார். இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரியின் மூலமாக **https://baanknet.com** என்ற இணையதளத்தின் வாயிலாக மின்னணு ஏல முறையில் விற்பனை நடைபெறும்.

**கிளை : மீளமேடு கிளை. கடன் கணக்கின் பெயர் : கடன் பெற்றவர் : M/s.லட்சுமி நிட்ஸ் பிரைவேட் லிமிடெட், பதிவு செய்யப்பட்ட அலுவலகம் :** பிளாட் எண்.A2, 188, SLS லக்சுரி அப்பார்மெண்ட்ஸ், கிழக்கு சம்பந்தம் சாலை, R.S. புரம், கோயம்புத்தூர், தமிழ்நாடு - 641002. **தொழிற்சாலை மற்றும் யூனிட் :** பிளாட் எண்.87 & 88 மற்றும் G.S. எண். 464128 (பாகம்), 462/3 (பாகம்), 467/1 (பாகம்), பிளாட் எண்.87, திருப்பூர் எக்ஸ்போர்ட் நிட்வேர் இன்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸ், தொட்டிபாளையம் சார்பதிவு மாவட்டம், திருப்பூர் தெற்கு தாலுக்கா, கோயம்புத்தூர். **இயக்குனர்கள் : (1) சுவாதி வர்மா, த/பெ.திரு.கோபால் வர்மா,** ஃபிளாட் எண்.1003, C-பிளாக், குளோபஸ் நக்ஷத்திரா, கோபால் லேஅவுட், பொன்னையராஜபுரம், கோயம்புத்தூர், தமிழ்நாடு 641001. **(2) திரு.கோபால் வர்மா, த/பெ.லேட் வியாம் சுந்தர் வர்மா,** ஃபிளாட் எண்.1003, C-பிளாக், குளோபஸ் நக்ஷத்திரா, கோபால் லேஅவுட், பொன்னையராஜபுரம், கோயம்புத்தூர், தமிழ்நாடு 641001. **உத்தரவாதம் அளித்தவர்கள் : (1) திரு.கோபால் வர்மா, த/பெ.லேட் வியாம் சுந்தர் வர்மா,** ஃபிளாட் எண்.1003, C-பிளாக், குளோபஸ் நக்ஷத்திரா, கோபால் லேஅவுட், பொன்னையராஜபுரம், கோயம்புத்தூர், தமிழ்நாடு 641001. **(2) திரு.S.செல்வராஜ், த/பெ.லேட்.சரவணா,** 222, காமராஜர் சாலை, IOB வங்கி அருகில், அத்தாணி, அந்தியூர் தாலுக்கா, ஈரோடு மாவட்டம். **(3) சுவாதி வர்மா, த/பெ.திரு.கோபால் வர்மா,** ஃபிளாட் எண்.1003, C-பிளாக், குளோபஸ் நக்ஷத்திரா, கோபால் லேஅவுட், பொன்னையராஜபுரம், கோயம்புத்தூர், தமிழ்நாடு 641001. **கடன் நிலுவைத் தொகை : 31.10.2026 வரையில் ரூ.14,81,01,589.35 மற்றும் வட்டி, ஏனைய கட்டணங்கள் சேர்த்து. கேட்பு அறிவிப்பு தேதி : 07.05.2026. சுவாதீனம் எடுக்கப்பட்ட தேதி : 19.08.2026. சொத்து விபரம் :** 1.345 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள காலி நிலச் சொத்து பின்வருமாறு அமைந்துள்ளது. S.F.No. 449/2A1 & 2A2 பாகம், பழைய S.F.No. 547,548A, புஞ்சை புளியம்பட்டி கிராமம் மற்றும் சார்பதிவு அலுவலகம், சத்தியமங்கலம் தாலுக்கா, ஈரோடு மாவட்டம் 638459. சொத்தின் எல்லைகள் : வடக்கில் வெள்ளிங்கிரி மற்றும் சுப்பாத்தாள் சொத்து, தெற்கில் சகுந்தலா அவர்களால் விற்கப்பட்ட நிலம், கிழக்கில் சகுந்தலா அவர்களால் விற்கப்பட்ட நிலம், மேற்கில் தென்வடல் சாலை. **திரு.கோபால் வர்மா அவர்களுக்கு சொந்தமான சொத்து. காப்பு விலை : ரூ.2,99,70,000/-. முன்வைப்புத் தொகை : ரூ.29,97,000/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-. ஏலம் நடைபெறும் தேதி : 23.11.2026. ஏலம் நடைபெறும் நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை.** சொத்தினை பார்வையிடும் தேதி : அனைத்து வேலை நாட்களிலும் 16.11.2026 முதல் 20.11.2026 தேதி வரையில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் கிளை மேலாளரின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம். **முன்வைப்புத் தொகை செலுத்த கடைசி தேதி : 23.11.2026 மதியம் 1.00 மணி வரை. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி Mob No : 8489903059 / முதன்மை மேலாளர் (RO) : Mob No : 8489903057**

**நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் : 1.** ஏல விற்பனை ஆன்லைன் மின்னணு ஏலம் / ஏலம் கோருதல் என்ற முறையில் **https://baanknet.com** என்ற இணையதளத்தின் வாயிலாக மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் (ஏலம் முடிவுக்கு வரும் வரையில் 10 நிமிடம் கால நீட்டிப்புடன்) நடைபெறும். **2.** ஏல விண்ணப்பங்களை ஆன்லைன் முறையில் **23.11.2026 மதியம் 1.00 மணி வரையிலோ** அல்லது அதற்கு முன்பாகவோ சமர்ப்பிக்க வேண்டும். **3.**மின்னணு ஏல விற்பனையானது **"எப்படி எங்கு உள்ளனவோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் நடைபெறும். **4.** விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்னணு ஏல நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுதல் மற்றும் ஏல விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்கு முன்பாக **https://baanknet.com** என்ற இணையதளத்திற்கு சென்று முழு விபரங்களுடன் கூடிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை அறிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **5.** வெற்றிபெற்ற ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர், வருமான வரிச் சட்டம் 1961-ன் உட்பிரிவு 194 IAன் பிரகாரம் ரூ.50.00 லட்சம் மற்றும் அதற்கு மேலான மதிப்பினை உடைய அசையாச் சொத்துக்களின் விற்பனை நடைமுறைகளில் 1% TDS தொகையினை செலுத்த வேண்டும். இத்தொகையினை படிவம் 26QB ல் சலான் (Challan) பூர்த்தி செய்து செலுத்தியதன் பின்னர் அதற்கான TDS சான்றிதழின